
# ஆய்வுச் சிந்தனைகள்




பதிப்பாசிரியர்

மா.கருணாகரன்

வீரா.அழகிரிசாமி

சு.கண்ணன்

க.நாகநந்தினி



ஐந்தமிழ் ஆய்வு மன்றம், மதுரை

2017

ஆய்வுச்சிந்தனைகள் 17 (2017)
AAIVUCHINTHANAIGAL, SERIAL - 17 (2017)
ஐந்தமிழ் ஆய்வு மன்றம், மதுரை.

ஐந்தமிழ் ஆய்வு மன்றம்

செயற்குழு

| | | |
|---|---|---|
| தலைவர் | : | மா.கருணாகரன் |
| மதிப்புறுத்தலைவர் | : | அ.நடராசன் |
| பொதுச்செயலர் | : | வீரா.அழகிரிசாமி |
| பொருளாளர் | : | சு.கண்ணன் |
| அமைப்புச்செயலர் | : | க.நாகநந்தினி |
| துணைத்தலைவர்கள் | : | சி.சுந்தரேசன்<br>இரா.கருப்பையா<br>ஆ.பாப்பா<br>க.முருகேசன் |
| இணைச்செயலர்கள் | : | அரங்க.மு.முருகையன்<br>சு.பூங்கொடி<br>த.கருப்பையா<br>சு.சந்திரா |
| செயற்குழு உறுப்பினர்கள் | : | ஆ.இரவிச்சந்திரன்<br>இரா.நவநீதகிருஷ்ணன்<br>மு.ஐயப்பன்<br>வே.லதாலட்சுமி |

பதிப்பாசிரியர்கள் : மா.கருணாகரன்
வீரா.அழகிரிசாமி
சு.கண்ணன்
க.நாகநந்தினி

ISBN : 978-93-80312-06-4

ஐந்தமிழ் ஆய்வு மன்றம், மதுரை மற்றும்
வாதவூர் பதிப்பகம், 3/1, கபிலர்தெரு,
திருவாதவூர், மதுரை - 625 110.

அச்சீடு : ஜோசப் பிரிண்டர்ஸ், 61 மெயின்ரோடு, பரவை.
மதுரை - 625 402. செல் 9994661194

இந்நூலில் இடம் பெறும் கட்டுரைக்கருத்து அந்தந்தக் கட்டுரையாளர்களுடையது.

# ஆய்வுப்பொருள்


1. ஈழம் என்றொரு தேசம்
முனைவர் பரிமளம் சுந்தர் 1

2. காலடி வீழ்ந்து இறைஞ்சுதல்
பேரா.முனைவர் இ.கி.இராமசாமி 5

3. தமிழ் மீட்புப் போராளி-ஆய்வறிஞர் தமிழண்ணல்
பேரா.கசுத்தூரி இராமசாமி 10

4. குறுந்தொகை காட்டும் பறவைகள்
பேராசிரியர் ப.சாந்தி 15

5. திருவரங்கத்தந்தாதியிலும் திருவேங்கடத்து அந்தாதியிலும் இடம்பெறும் அகமரபுகள்
முனைவர் மு.கீதா 20

6. புறநானூறு காட்டும் வாழ்வியல் சிந்தனைகள்
முனைவர் க.அழகர் 25

7. "தொ.பரமசிவனின் ஆய்வுமுறையியல்" நூலில் வெளிப்படும் புலப்பாட்டு நெறி
முனைவர் மு.ஐயப்பன் 30

8. மனிதநேயம் : விவிலிய விளக்கம்
முனைவர் உ.சாமுவேல் ஸ்டீபன் 35

9. கம்பன் அன்புசார் விழுமியங்கள்
முனைவர் க.முருகேசன் 40

10. வள்ளலார் கூறும் பசியின் கொடுமை
சு.பாபு 45

11. வண்ணமும் எண்ணமும்
முனைவர் பா.சிங்காரவேலன் 50

# 9. கம்பன் அன்புசார் விழுமியங்கள்

## முன்னுரை

காலத்திற்கேற்ற வளர்ச்சியும், வளர்ச்சிக்கேற்ற மாற்றங்களும் தேவைதான் என்றபோதும் மாறாத விழுமியங்களாகிய அறநெறிகளுக்கு என்றென்றும் மதிப்புண்டு. தொன்மையும் இலக்கியச் சுவையும் ஒருங்கே பொருந்தியுள்ள தமிழ் இலக்கியப் பனுவல்களில் ஊடும் பாவுமாக நன்னெறிகளாகிய அறங்கள் நெய்யப்பட்டுள்ளன. மானுட வாழ்வு மதிப்புடையதாக அமைவதற்கும், அடுத்த நூற்றாண்டுத் தலைமுறையை நல்வழிப்படுத்துவதற்கும் தேவையான செல்நெறிக் கோட்பாடுகளைக் கம்பன் தன் காப்பியத்தில் பதிவுசெய்துள்ள பாங்கினைப் புலப்படுத்திக் காட்டுவது இவண் நோக்கமாகின்றது.

## அறமும் மறமும்

கம்பராமாயணத்தில் அறத்திற்கான சொல்லாட்சிகள் பலவிடங்களில் காணக் கிடைக்கின்றன.

*"குலம் சுரக்கும் ஒழுக்கம் குடிக்கு எல்லாம்"*
(கம்ப., பால., பா.69)

*"அற்பின் நின்றன அறங்கள் அன்னவர்*
*கற்பின் நின்றன கால மாரியே"* (கம்ப., பால., பா.90)

*"கடை உற நல்நெறி காண்கிலாதவர்க்கு"*
(கம்ப., பால., பா.1028)

*"நல்நெறி விலக்கும் பொறி என எறியும் கராத்தது"*
(கம்ப., பால., பா.106)

*"அருங் கடை இல்மறை அறைந்த*
*அறம் செய்த அறத்தாலும்"* (கம்ப., பால., பா.656)

"அணி இழை மகளிரும், அலங்கல் வீரரும்
தணிவன அறநெறி தணிவு இலாதன"
(கம்ப., பால., பா.125)

போன்ற பாடல் வரிகளில் அறம், ஒழுக்கம், நல்நெறி என்றவாறு சொற்கள் இடம்பெற்றுள்ளமையைக் கருத்தில்கொண்டு நோக்கும்போது கம்பரின் நோக்கம் அறந்தலை நிறுத்துதலே என்பதை அறிய முடிகின்றது.

இராமனுக்கு முடிசூட்டுவதற்கு முடிவுசெய்த பின்பு தயரதன் தன் குலகுருவாகிய வசிட்டரிடம் இராமனுக்கு உறுதிப்பொருள்களை

*முனைவர் க. முருகேசன், தமிழ்த்துறைத்தலைவர், கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் - 641 029.*